# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),
மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். 1. SA 6224/விசாரணை/E/2024, 2. SA 6340/விசாரணை/E/2024, 3. SA 6457/விசாரணை/E/2024, 4. SA 6711/விசாரணை/E/2024, 5. CP 898/விசாரணை/E/2024, 6. CP 991/விசாரணை/E/2024, 7. CP 1051/விசாரணை/E/2024 & 8. CP 1029/விசாரணை/E/2024**

திரு.K.பாண்டி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை – 625 020. .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இந்த எட்டு வழக்குகளின் மீது இவ்வாணையத்தால் **10.03.2026** அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், மதுரை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)/பொதுத் தகவல் அலுவலர் சார்பில் திருமதி.வெற்றிச்செல்வி, மதுரை மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர்(நிலம்) 15.05.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் 10.03.2026 தேதியிட்ட உத்தரவின்படி, மேல்முறையிட்டாளருக்கு 05.05.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக 11.05.2026 அன்று ஆவணங்களை பார்வையிட அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில், மேல்முறையீட்டாளர் 12.05.2026 அன்று ஆவணங்களை பார்வையிட்ட பின்பாக அளித்த கடிதத்தினை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

2. மேல்முறையீட்டாளர் 12.05.2026 தேதியிட்ட கடிதத்தில், தொட்டப்பநாயக்கனூர் SLR 33 சர்வே எண்கள் SLR பார்வையிட்டதில் சிதைந்த நிலையல் உள்ளதால் ஆவண நகல்கள் எதுவும் பெறவில்லை என்றும், தொட்டப்பநாயக்கனூர் மற்றும் நக்கலப்பட்டி இனாம் பதிவேடு தேவதாயம் பதிவேடுகள் தனது பார்வைக்கு வைக்கவில்லை, இனாம் பதிவேடு இல்லையென மறுக்கிறார்கள்/தெரிவிக்கின்றனர் என்றும், மேற்டி ஆவணங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு மாற்றம் செய்யவில்லை என்றும், சட்டப்பிரிவு 6(3)-ல் மனுவை மாற்றம் செய்து தகவலை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் தனது 14.05.2026 தேதியிட்ட அறிக்கையில், மேல்முறையீட்டாளர் கோரும் இனாம் பதிவேடு தேவதாயம் பதிவேடுகள் தங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை என்ற விபரம் மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

3. மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் 13.05.2026 தேதியிட்ட தனது அறிக்கையில், முன்னாள் மதுரை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)/பொதுத் தகவல்

அலுவலரின் 29.04.2026 தேதியிட்ட எழுத்துமூலமான விளக்கத்தை இணைத்து சமர்ப்பித்துள்ளார். முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் மேற்குறித்த தனது எழுத்துமூலமான விளக்கத்தில், தமிழ்நாடு தகவல் ஆணைய வழக்கு எண்.29396/மா.த.த.ஆ/2013-ல் பிறப்பித்த ஆணையில் "பல்வேறு நபர்கள் பெயர்களில் உள்ள நிலங்களை பற்றிய தகவல்கள் சம்மந்தமில்லாத நபர்கள் கைகளில் சேர்க்கையில் மீண்டும் பல வழக்குகளும், சட்ட சிக்கல்களும் ஏற்படும் வாய்ப்புள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எனவே மேல்முறையீட்டாளர் இவ்வலுவலக வைப்பறையில் உள்ள ஆவணங்களின் நகல் கோருவதில் அந்நிலத்தில் அவர்களது உரிமையை காடும் பத்திர ஆவணம்/நிலவரி ரசீதினை/இனாம் ஒழிப்பு சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஆணைகள் நகல் சமர்ப்பிக்கும்பட்சத்தில் அவரது நிலம் தொடர்பான தகவல் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவித்து 12.02.2024 மற்றும் 15.03.2024 தேதியிட்ட கடிதங்களின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே மேல்முறையீட்டாளரின் 6(1) மனுக்களுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவரது எழுத்துமூலமான விளக்கத்தை ஏற்று, அவர் மீதான நடவடிக்கையை இவ்வாணையம் இத்துடன் கைவிடுகிறது.

4. ஆகவே இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தொட்டப்பநாயக்கனூர் மற்றும் நக்கலப்பட்டி இனாம் பதிவேடு தேவதாயம் பதிவேடுகள் தங்களது அலுவலக பராமரிப்பில் இல்லை என்று பொதுத் தகவல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது தொடர்பான பிரமாண பத்திரத்தை (Sworn Affidavit) மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த அறிக்கையை ஆணையத்தில் **30.06.2026** அன்று நேரடியாக தவறாமல் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டு, இவ்வழக்கினை முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஆணை நாள் : 01.06.2026**

**ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

<u>**வழக்கு எண்கள். 1. SA 6224/விசாரணை/E/2024, 2. SA 6340/விசாரணை/E/2024, 3. SA 6457/விசாரணை/E/2024, 4. SA 6711/விசாரணை/E/2024, 5. CP 898/விசாரணை/E/2024, 6. CP 991/விசாரணை/E/2024, 7. CP 1051/விசாரணை/E/2024 & 8. CP 1029/விசாரணை/E/2024**</u>

பெறுநர்
மேல்முறையீட்டு அலுவலர்/
மாவட்ட வருவாய் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மதுரை – 625 020.

<u>மேல்முறையீட்டு அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலர், மதுரை மூலமாக :-</u>
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது),
மதுரை (02.01.2024 முதல் 09.01.2024 வரையில்)

பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
மதுரை – 625 020.

திரு.K.பாண்டி
38 நேரு தெரு, களத்துப்பொட்டல்,
தத்தனேரி, மதுரை-625 018.

Copy to: Files
RJ/PS 1.6